**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.172/2025

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பழனிசாமி | வயது: 58 |
| த/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதிகள் தோன்ற தரப்பினராக உள்ளார்கள். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 16.11.1976 – பொன்னம்மாள், வெங்கடாசல கவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 1** |
| பூவாத்தாள் பெயரில் உள்ள வீட்டு வரி 2 எண்ணிக்கை | அசல் | **வா.சா.ஆ 2** |
| பூவாத்தாள் பெயரில் உள்ள தண்ணீர் வரி 2 எண்ணிக்கை | அசல் | **வா.சா.ஆ 3** |
| 8.2.2024 – வாதி பெயரில் பூவாத்தாள், சுலோச்சனா, மல்லிகா ஏற்படுத்திக்கொடுத்த பதிவு ஏற்படாத கிரைய உடன்படிக்கை பத்திரம் | அசல் | **வா.சா.ஆ 4** |
| 1.5.2025 – திருப்பூர் வடக்கு தொட்டிபாளையம் கிராமம், வார்டு பி, பிளாக் 99 சர்வே எண். 3 க்குரிய TSLR பதிவேடு | கணினி நகல் | **வா.சா.ஆ 5** |
| 20.3.2025 – வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு | அலுவலக | **வா.சா.ஆ 6** |

| | | |
|---|---|---|
| அனுப்பிய சட்ட அறிவிப்பு | நகல் | |
| 27.03.2025 – பிரதிவாதிகள் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு | அசல் | **வா.சா.ஆ 7** |
| வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 8** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.07 16:42:32 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.